25.11.2025

அ.வ.எண். 1075/2017

பி.சா.1 –புஷ்பா , க/பெ.சதாசிவம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 25.11.2025 is accordance with the provision of Act X of 3331

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.12 மனைவரி தோராய பட்டாவில் வழக்கு சொத்தின் புதிய க.ச.எண்.569/9 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. படிக்காமல் கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில், புதிய சர்வே எண்ணை கூறவில்லை என்றும், 1979 ல் கே.வி.முத்துசாமி கிரயம் பெற்ற பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பழைய க.ச.எண்.409/2B2 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 1991 ல் பட்டாவில் பழைய க.ச.எண்.409/2B2 என்பதற்கு புதிய க.ச.எண்.569/9 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே நான் வழக்கு சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லும் கிரய பத்திரத்தில் புதிய க.ச.எண்.569/9 குறிப்பிடாததால் மேற்படி வா.சா.ஆ.6 கிரய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1991 ல் வழங்கியுள்ள பட்டா எண்ணை வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. உண்மையில் கே.வி.முத்துசாமி வழக்கு சொத்தை கையொப்பம் செய்து எனக்கு கிரயம் கொடுத்திருந்தால் பட்டா எண் மற்றும் புதிய க.ச.எண் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் தெரியவில்லை

3. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பக்கம் 3 ல், கீழ்காணும் காலியிடத்திற்கு நாளது தேதியில் தங்களது பெயருக்கு பட்டா ராஜினாமாவும் செய்து கொடுத்துள்ளேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் கே.வி.முத்துசாமி கிரயம் கொடுத்திருந்தால் 2019 ம் ஆண்டு வரை பட்டா மாற்றம் செய்யாமல் இருந்திருக்கமாட்டோம் என்றும், கே.வி.முத்துசாமி கிரயம்

கொடுக்காததால் தான் 2019 ம் ஆண்டு வரை பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி எண்.2 ல், தாவா சொத்தில் ஒரு ஷெட் போட முயற்சி செய்து கொண்டிருந்தபோது என் கணவர் 13.12.2024 தேதியில் இறந்துவிட்டார். அதன் பின் என்னால் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட முடியாமல் உள்ளது என்றும், ஆனால் இன்றும் ஷெட் போட அமைத்த இரும்பு தூண்கள் தாவா சொத்தில் உள்ளன என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனவே, தாவா சொத்தில் ஷெட் உள்ளது என்றும், செப்டிக் டேங்க் உள்ளது என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அஸ்தீவாரம் போட்டுள்ளோம், லெட்டின் குழி தோண்டியுள்ளோம். தாவா சொத்திற்கு அனைத்து வேலைகளையும் செய்தோம். பொருட்கள் அனைத்தும் உள்ளே உள்ளது. மேற்சொன்னவாறு உள்ளதற்கு புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. மேற்சொன்னவாறு உள்ளதற்கு புகைப்படம் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான்.

5. என் கணவர் உயிருடன் இருக்கும்போது ஷெட் போட முயற்சித்தோம் என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அஸ்திவாரம் போட்டுவிட்டோம். 3 வருடங்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். 3 வருடங்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர் என எனது பிரமாண வாக்குமூலத்திலோ, எதிருரையில் சொல்லவில்லை என்றால் நினைவில்லை. தாவா சொத்தில் 2014 ம் ஆண்டு ஷெட் போட முயற்சித்தவுடன் வாதிகள் புகார் கொடுத்தனர் என்றால் சரியல்ல. நாங்கள் உள்ளே சென்று வேலைகளை செய்த பின்னிட்டு தான் புகார் கொடுத்தனர்.

6. கே.வி.முத்துசாமி கையொப்பமோ, கைரேகையோ செய்து கிரய பத்திரம் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல, அவர் உடன் வந்து ஆவணம் எழுதி கொடுத்தார். என்னுடைய மருமகன் காவல் நிலையத்தில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். வாதிகள் இடையூறு செய்வதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையொப்பம் கே.வி.முத்துசாமியுடையது

அல்ல என்றும், அதனால்தான் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் வேறுபடுகிறது என்றால் சரியல்ல. கையொப்பம் செய்து கொடுத்தார். கே.வி.முத்துசாமி வழக்கில்தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ.9, 1983 வருமான வரி clearance certificate லும், வா.சா.ஆ.8, தபால் மறறும் முதலீடு மாறுதல் ஆவணத்திலும், வா.சா.ஆ.7 கூட்டுறவு வங்கி ரசீதிலும், வா.சா.ஆ.10, புகார் ஏற்பு ரசீதிலும் கே.வி.முத்துசாமி என தான் கையொப்பம் செய்துள்ளார் என்றும், 1992 ம் ஆண்டு கிரய ஆவணத்திலும், கே.வி.முத்துசாமி என்று கையொப்பம் செய்திருப்பார் என்றும், கிரய ஆவணத்தில் வெறும் முத்துசாமி என்று உள்ளதால் அது முத்துசாமியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல.

7. 1979 ம் ஆண்டு கே.வி.முத்துசாமி கிரயம் பெற்றதிலிருந்து கே.வி.முத்துசாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது என்றும், அவரது மறைவிற்கு பின்னிட்டு வாதிகளின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. முத்துசாமியும், என் கணவரும் உயிருடன் இருந்தவரை எந்த பிரச்சனையும் இல்லை, தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர். கடந்த 2014 ம் ஆண்டு நாங்கள் ஷெட் அமைக்க வந்தபோது தான் எங்களுக்கு கே.வி.முத்துசாமி கிரயம் செய்து தந்ததாக பத்திரம் வைத்துள்ளது தெரியவந்தது என்றால் இடம் வாங்கிய விவரம் கே.வி.முத்துசாமி குடும்பத்திற்கு தெரியும். அது எங்களுடைய இடம் என்பது அவர்களது குடும்பம் அனைவருக்கும் தெரியும்.

8. கிரயத்தின்போது யார் யார் உடன் வந்தார்கள் என்றால் மொத்தம் 4 நபர்கள் வந்தார்கள், ரத்தினசாமி என்ற நபர் வந்தார் மற்ற 3 நபர்கள் இறந்துவிட்டனர். உண்மையில் கிரயம் ஏற்பட்டிருந்தால் முத்துசாமியின் குடும்பத்தினர் வந்திருப்பார்கள் என்றால் அவர்களுக்கு தெரிந்து தான் கிரயம் ஏற்பட்டது. முத்துசாமிக்கு நாங்கள் எவ்வித மறுபயனும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி கிரயம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முத்துசாமி கிரயம்

பெற்ற பத்திரத்தின் அசல் ஆவணம் மற்றும் பட்டாவை தருவதாக சொல்லவில்லை என்றால் படித்து காட்டினால் தான் தெரியும்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur